[18th March 1964

விருத்தாசலம் சப்-மாஜிஸ்டிரேட் அலுவல் விஸ்தரிப்பு

* 304 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலம் தாலுகாவிலுள்ள திட்டக்குடி போலீஸ் ஸ்டேஷன், தொழுதூர் போலீஸ் ஸ்டேஷன் எல்லைகளுக்குட்பட்ட கிரிமினல் வழக்குகளை திட்டக்குடி டிபுடி தாசில்தார் அவர்களின் ஆபீஸிலேயே, விருத்தாசலம் சப்-மாஜிஸ்ட்ரேட் அவர்களால், வாரத்திற்கு ஒருமுறை விசாரணை செய்ய ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : No.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குச் சலுகைகள்

* 305. கேள்வி—திரு. மா. இராசாங்கம்
திரு. கி. நாராயணசாமி பிள்ளை } : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசாங்கப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தரப்படும் வீட்டு வாடகை, மருத்துவ உதவி போன்ற சலுகைகள் தனியார் துறை பள்ளி ஆசிரியர்களுக்கும் கிடைக்கும்படி செய்ய உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் வேலை செய்கிற ஆசிரியர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க ஏதேனும் சட்டம் கொண்டு வர மாநில அரசாங்கத்துக்கு உத்தேசம் உண்டா ? அது போன்ற கருத்து மத்திய அரசாங்கத்தால் மாநில அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் இல்லை.

General Provident Fund for Teachers

* 306 *Q*.—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any additional amount has been deducted so far from the salaries of the teachers due to the changes in the General Provident Fund Scheme; and

(*b*) whether there is any proposal to withdraw those changes at present?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) No.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த கம்பல்ஸரி டெபாஸிட் ஸ்கீம் மத்திய சர்க்காரினால் கைவிடப்பட்டு விட்டது. இப்போது ஆசிரியர்களிடத்தில் கட்டாயமாகக் கழிக்கப்படும் ப்ராவிடெண்ட்ஃபண்டை நிறுத்தி வைக்க அரசாங்கம் மறு பரிசீலனை செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அத்தகைய உத்தேசம் அரசாங்கத்திற்கு இப்போது இல்லை.